DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | -- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 706/2025** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | : மகாராஜா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 10.07.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 10 July 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கருத்தானூர் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். சுமார் 1 ஆண்டுக்கு முன்பாக வேறொரு வழக்கிற்காக காவல் நிலையம் சென்ற போது என்னிடம் இரண்டு கையெழுத்து வாங்கினாகள். அந்த கையெழுத்து தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம்

மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து ஆகும். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆகும். அத்தாட்சியில் உள்ள அந்த கையெழுத்து அ.சா.ஆ. 3 ஆகும்.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 27.06.2025 15.00 மணிக்கு நானும் பாரதி என்பவரும் கருத்தானூர் சென்றுகொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி வரதாராஜ் என்பரை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவராக வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கிற்கு பயன்படுத்திய அரிவாள் மட்டும் 10 கிராம் கஞ்சா ஆகியவற்றை அத்தாட்சி மூலம் பெற்று கைப்பற்றினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.